# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி,
உன்னை ஆசீர்வதித்து,
உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்;
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

ஆதி. 12:2

# தூது

நற்செய்தி துணுக்குகள்



மே – 2026

(மடல் - 26) செய்தி –5

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 1 |
| ஆயரம்மா மடல் | 3 |
| பெண்கள் பகுதி | 5 |
| Children's Corner | 9 |
| வேத வினாக்கள் | 20 |
| கோதுமை மணி | 23 |
| துணுக்குகள் | 25 |
| ஆலய பக்கம் | 27 |

# ஆயர் மடல்

**“கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்.” 2 கொரிந்தியர் 8:21**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மையும், நமது குடும்பங்களையும் பாதுகாத்து வழிநடத்தி வந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். ஈஸ்டர் பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாட கிருபை செய்த ஆண்டவரைத் துதிக்கிறேன். ***கடவுளின் பெரிதான கிருபையினால் கடந்த மூன்று ஆண்டுகளாக உங்களோடு இணைந்து ஆண்டவரின் திருப்பணியைச் செய்ய கிருபைப் பாராட்டிய ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். இந்த மூன்று ஆண்டுகளும் நீங்கள் என் மீதும் எனது கும்பத்தின் மீதும் பாராட்டிய அளவு கடந்த அன்புக்காகவும், ஆதரவுக்காகவும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறேன். வருகின்ற 24ஆம் தேதி இந்தியாவுக்குப் பயணப்பட இருக்கிறோம். தொடர்ந்து எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*** புதிய மாதம் நமக்கும் நம் குடும்பத்துக்கும் ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் அருள் செய்வாராக.

இரண்டு கொரிந்தியர் 8,9ஆம் அதிகாரங்களை ***நன்கொடை கடிதம்*** என்று அழைக்கிறோம். புதிய கிறிஸ்தவர்களாகிய கொரிந்து திருச்சபை மக்களின் நல்மனதையும், தியாக மனப்பான்மையையும், நல்லது செய்யும் ஆர்வத்தையும் அறிந்த பவுலடியார், வறுமையில் வாழும் தாய்த் திருச்சபையாகிய எருசலேம் திருச்சபைக்குக் கொரிந்தியரும், அகாயா நாட்டு கிறிஸ்தவர்களும் நன்கொடை கொடுக்கவேண்டும் என்கின்ற உற்சாகத்தைக் கொடுத்து இந்தக் கடிதத்தை எழுதுகிறார். பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்தில் நற்செய்தியை அறிவிப்பதோடு, இன்னொரு பகுதியாக எளியத் திருச்சபை மக்களுக்கு உதவி செய்வதற்காக நிதி திரட்டுகின்றப் பணியையும் செய்கிறார். இப்பணிக்கு அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் வெறும் பணம், காசு என்கின்ற சமூக நிவாரணப் பணி கண்ணோட்டத்தோடு பெயர் வைக்காமல், ***தர்மகாரியம்*** (8:7), ***உபகாரம்*** (8:4), ***தர்மப்பணம்*** (8:19), ***தர்மசகாயம்*** (9:1), போன்ற சமய கண்ணோட்டத்தோடு பெயர்களைச் சூட்டி இது இறைப்பணி என்கிறார்.

தெசலோனிக்கா, பிலிப்பு போன்ற சபைகள் இணைந்த மக்கெதோனியா மாநிலத்தின் சபைகளைக் குறித்து பவுல் இங்கே குறிப்பிடுகிறார். அவர்களின் பெருமை மிக்கமனிதநேயம் என்பதோடு மட்டுமல்லாமல், ***அவர்கள் கொடுக்கின்ற நன்கொடை கடவுள் தந்த கிருபை அல்லது அருள் என்கிறார்.*** (8:1) நன்மை செய்வதற்கான வாய்ப்பைப் பயன்படுத்தி, பிறருக்கு உதவும் நல்மனதையும், தாராளசிந்தையையும் இறைவன் அவர்களுக்கு அருளியிருக்கிறார். ***அதோடு மக்கெதோனியாத் திருச்சபை மக்களின் இந்தத் தாராள மனப்பான்மையும், செயலும் இறைவனுடைய தாராள மனப்பான்மையிலிருந்து சுரக்கின்றது*** என்கிறார். (1கொரி 1:4) இந்த கிருபையை அவர்கள், கடவுளிடமிருந்து பெற்றுக் கொடுப்பதால், ***அவர்கள் கொடுக்கின்ற நன்கொடை கடவுளின் அருள்*** என்கிறார்.

உண்மையான அன்பை அடித்தளமாகக் கொண்டதுதான் கிறிஸ்தவம். ஆகையால், இவ்வுலகத்தில் செல்வத்தைப் பெற்றிருப்போர், தம் சகோதர, சகோதரிகள் தேவையில் இருப்பதைக் கண்டு பரிவு காட்டவேண்டும். நாம் உதவி செய்ய முன்வரவில்லை என்றால், நிச்சயமாக கடவுளின் அன்பு நம்மிடத்தில் நிலைத்திருக்க முடியாது. நமது உண்மை அன்பை செயலில் காட்டவேண்டும். (1யோவான் 3:17,18). ***இதை பவுல் கட்டாயம் என்று***

***சொல்லவில்லை. ஏனெனில் அன்பின் செயலுக்குக் கட்டாயப்படுத்தும் சட்டம் அவசியமில்லை*** என்கிறார்.

இதற்கு ஆதாரமாக இயேசுகிறிஸ்துவின் சிறப்பான முன் மாதிரியை முன் நிறுத்துகிறார். (2கொரி 8:9) கடவுளின் முழுத் தன்மையயும், முழு நிறைவும் இயேசுவில் குடிகொண்டிருந்தபோதிலும், (கொலோ 2:9) கடவுளுக்கு இணையாயிருக்கும் செல்வ நிலையைத் தாமாகவே வெறுமையாக்கி, (பிலி 2:6,7) நன்மைப் போல வலுவற்ற உள்ளியல்புகொண்ட மனிதனாகி, (ரோமர் 8:13), சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டதோடு, பாவமே அறியாதவர் நமக்காகப் பாவத்தைச் சுமந்தார். இயேசுவைப் போல நாமும் கடவுளின் அன்பால் நிரப்பப்பட்டு, எளியவர்களுக்கு நம்மையே தியாகம் செய்து பகிர்ந்து கொடுக்க முன்வரவேண்டும் என்கிறார்.

அதோடு, எளிய திருச்சபைகளில் திரட்டப்படும் நன்கொடை தவறான வழிகளில் செலவிடப்பட்டுவிடுமோ என்கின்ற ஐயத்தைப் போக்கவும், ஒளிவு மறைவின்றி இறைப்பணி நடைபெறவேண்டும் என்கின்ற அக்கறையும், கவனக் குறைவினால் இழப்புகள் ஏற்படாமலிருக்கவும், இடமில்லாதிருக்கவும், தம்மால் புறம் கூறலும், அவதூறுப் பேச்சுக்கு இயன்றவரை ஆண்டவர் முன்னிலையில் மாத்திரமல்லாது, மக்கள் முன்னிலையிலும் நன் மதிப்பை இழக்காது பார்த்துக் கொள்ளவேண்ம் என்கிறார். இதற்காக நீதிமொழிகள் 3:4-ஐ எடுத்துப் பயன்படுத்துகிறார். தீர்ப்பு கூறுகிறவர் ஆண்டவர் என்றாலும், நமது இறைப் பணி எங்கும் தூய்மையும், நீதியும், சமூக மதிப்பும் அவசியம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

கிறிஸ்துவின் அன்பை இவ்வுலகுக்கு எடுத்துக்காட்டுவோம். கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
Rev. Dr. A. Samuel

## ஜுன் மாத தலைப்பு

# "மேலானவைகளை நோக்கி"

- கொலோசேயர் 3:2

***"Set your minds on things above"***

***— Colossians 3:2***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மூன்று வருடங்களாக நமது CSI Tamil Parish திருச்சபையில் ஆண்டவரின் திருப்பணியை செய்ய கிருபை செய்தத் தேவனை துதிக்கிறேன். எங்கள் குடும்பத்தின் மீது நீங்கள் பாராட்டின அன்புக்காகவும், உதவிக்காகவும், ஜெபத்திற்காகவும் நன்றி செலுத்துகிறேன். கடந்த மாதம் நெருக்கடியான சூழ்நிலையிலும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாகப் பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

***“நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.”*** (ஆதியாகமம் 12:2)

ஆதியாகமம் 12-ஆம் அதிகாரம், ஒரு தனி மனிதன் வழியாக தேவன் உலகிற்கு அளிக்கப்போகும் ஆசீர்வாதத்தைக் குறித்துப் பேசுகிறது. குறிப்பாக, இரண்டாம் வசனம் ஒரு மாபெரும் உடன்படிக்கையைக் குறித்த வாக்குத்தத்தம். இது வழங்கப்பட்ட காலம் சுமார் கி.மு. 2100 என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

ஆபிராம் வாழ்ந்த **ஊர்** (Ur) மற்றும் ***ஆரான்*** (Haran) ஆகிய நகரங்கள் அக்காலத்தில் சுமேரிய நாகரிக, கலாச்சாரத்தின் உச்சத்தில் இருந்த நகரங்கள். நிலவு கடவுளாகிய ***சின்*** (Sin) வழிபாட்டிற்குப் பெயர் பெற்றது. அக்காலத்தில் மெசபடோமியாவில் பல தெய்வ வழிபாடு நிலவிய சூழலில், ஒரே உண்மை கடவுளாகிய கர்த்தர் ஆபிராமுக்குத் தம்மை வெளிப்படுத்தி அழைக்கிறார்.

ஒரு மனிதனின் அடையாளம், அவனது குடும்பம், அவனது தேசம் மற்றும் அவனது மூதாதையரின் நிலத்தைச் சார்ந்த செத்துக்கள் அனைத்தையும் விட்டுவிட்டு ஆண்டவர் ஆபிராமிடம் புறப்பட சொன்னது, அக்கால சூழலில் எளிதில் ஏற்றுக்கெள்ள முடியாத ஒன்று. ஆனால் ஆண்டவர் ஆபிராமுக்கு வாக்குறுதிக் கொடுத்து அழைக்கிறார்.

மூன்று முக்கியமான வாக்குறுதிகளை ஆபிராமுக்கு ஆண்டவர் கொடுக்கிறார்.

***1. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்:***

குழந்தைகள் இல்லாதச் சூழலில், இனி குழந்தைப் பிறக்க வாய்ப்பு இல்லாதச் சூழலில் (முதுமை) ***பெரிய ஜாதியாக்குவேன்*** என்கின்ற வாக்குறுதி மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. இந்த வாக்குறுதிதான் பின் நாட்களில் இஸ்ரவேல் எனும் மக்களினம் உருவாகுவதற்கும், விசுவாசத்தினால் நாம் அனைவரும் ஆபிரகாமின் பிள்ளைகளாக மாறுவதற்கும் அடித்தளமிட்டது.

***2. உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்:***

பாபேல் கோபுரத்தைக் கட்டியவர்கள் தங்களுக்கு ***பேர்*** உண்டாக வேண்டும் என்று விரும்பினார்கள் (ஆதி 11:4), ஆனால் அவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். ஒரு மனிதனுக்குப் பெயரையும், புகழையும் ஆண்டவரால் மட்டுமே கொடுக்கமுடியும் ஆண்டவர், தாமே முன் வந்து, ***உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் என்று ஆபிரகாமுக்கு வக்குக் கொடுக்கிறார்.*** எனவேதான் ஆபிரகாம் விசுவாசிகளின் தந்தையாகப் போற்றப்படுகிறார்.

***3. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்:***

ஆபிராம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதோடு நின்றுவிடாமல், அவரே எல்லா மக்களுக்கும் ஆசீர்வாதத்தின் கால்வாயாக (Channel of Blessing) இருக்க வேண்டும் என்பதே கடவுளின் திட்டம். (ஆதியாகமம் 12:3)

இந்த கடவுளின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் ***நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும்... விட்டுப் புறப்பட்டு..."*** எனகின்ற கடவுளின் கட்டளைக்கு ஆபிராம் கீழ்ப்படிவதன் வழியாகவே பெற்றுக்கொள்கிறார்.

ஆபிரகாமைப் போலவே, நாமும் ஆண்டவரின் வாக்குறுதிக்குக் கீழ்படிந்து ஆண்டவர் கொடுக்கின்ற ஆசீர்வாத்தைப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***


## தேவனின் அன்பை பகிரும் சேவை

மனித வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம் என்ன என்பதை வேதாகமம் நமக்கு தெளிவாகச் சொல்கிறது - மனிதன் தேவனை நேசித்து, மனிதருக்கு அன்புடன் சேவை செய்வதில்தான் வாழ்க்கையின் உண்மையான அர்த்தம் இருக்கிறது என்பதாகும். “உன் முழு இருதயத்தாலும், உன் முழு ஆத்துமாவினாலும், உன் முழு மனதினாலும் கர்த்தராகிய தேவனை நேசி உன் அயலானையும் உன்னைப்போல் நேசி” (மத்தேயு 22:37,39) என்ற வசனம், தேவனுக்கும் மனிதருக்கும் சேவை செய்வதே வாழ்க்கையின் அடிப்படை என்பதை நமக்கு அறிவுறுத்துகிறது.

தேவனைச் சேவிப்பது என்பது வெறும் ஆராதனைக்கும், ஜெபத்திற்கும் மட்டும் கட்டுப்பட்ட ஒன்று அல்ல. அது நம்முடைய வாழ்நாள் முழுவதும் வெளிப்படும் ஒரு வாழ்க்கை முறையாகும். நாம் உண்மையாய் தேவனை நேசிக்கிறோமா என்பதை அவர் நம்மிடம் கேட்பதில்லை அதற்குப் பதிலாக, நாம் பிறருக்கு எப்படிப் பழகுகிறோம் என்பதை அவர் பார்க்கிறார். “நீங்கள் இந்த சிறியவர்களில் ஒருவருக்குச் செய்ததை எனக்கே செய்தீர்கள்” (மத்தேயு 25:40) என்ற இயேசுவின் வார்த்தைகள், மனிதருக்குச் செய்யும் சேவை தேவனுக்கே செல்கிறது என்பதை உணர்த்துகின்றன.



இயேசு கிறிஸ்துவே சேவையின் மிகச்சிறந்த முன்மாதிரி. அவர் இந்த உலகிற்கு வந்தது ஆட்சி செய்ய அல்ல, சேவை செய்யத்தான். “அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.” (மாற்கு 10:45). அவர் தம் சீடர்களின் கால்களை கழுவிய சம்பவம் (யோவான் 13:14,15), தாழ்மையும் சேவையும் எவ்வளவு முக்கியமானவை என்பதை நமக்கு கற்றுக்கொடுக்கிறது. உயர்ந்தவராக இருந்தும் தாழ்ந்து சேவை செய்த இயேசு, நாமும் அதே மனப்பான்மையுடன் வாழ வேண்டும் என்று அழைக்கிறார்.



மனிதருக்குச் சேவை செய்வது பல வடிவங்களில் இருக்கலாம். பசியானவர்களுக்கு உணவு கொடுப்பது, நோயாளிகளைப் பார்ப்பது, துன்பத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதல் அளிப்பது, உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவுவது—இவை அனைத்தும் தேவனுக்குப் பிரியமான செயல்கள். "அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள் இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்." (எபிரெயர் 13:16). இவ்வாறு நாம் செய்யும் ஒவ்வொரு நன்மையும், தேவனுக்கு ஏற்ற பலியாக மாறுகிறது.

அதே நேரத்தில், சேவை செய்யும் மனப்பான்மை தாழ்மையுடன் இணைந்திருக்க வேண்டும். பெருமை அல்லது புகழுக்காகச் செய்யப்படும் சேவை, தேவனுக்குப் பிடிக்காது. "ஒவ்வொருவரும் தமக்கான காரியங்களை மட்டும் பார்க்காமல், பிறருக்கான காரியங்களையும் பாருங்கள்" (பிலிப்பியர் 2:4). உண்மையான சேவை என்பது சுயநலமற்ற அன்பின் வெளிப்பாடாகும்.

நாம் வாழும் உலகில் போட்டி, சுயநலம், அக்கறையின்மை அதிகரித்து வருகிறது. இப்படியான சூழலில், தேவனுக்கும் மனிதருக்கும் சேவை செய்யும் வாழ்க்கை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு சிறிய உதவி, ஒரு இனிய வார்த்தை, ஒரு அன்பான செயல்—இவை யாரோ ஒருவரின் வாழ்க்கையை மாற்றக்கூடியவை.

தேவனைச் சேவிப்பது மனிதனை விட்டு பிரிந்து செய்ய முடியாத ஒன்று. "தன் சகோதரனை நேசிக்காதவன், காணாத தேவனை நேசிக்கிறேன் என்று சொல்ல முடியாது" (1 யோவான் 4:20). ஆகவே, மனிதனை நேசிப்பதும் சேவிப்பதும், தேவனை நேசிப்பதற்கான நேரடி சான்றாகும்.

இந்த உண்மையை உணர்ந்து, நாம் ஒவ்வொருவரும் தினசரி வாழ்க்கையில் சேவையை ஒரு பழக்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும். வீட்டில், வேலை இடங்களில், சமூகத்தில்—எங்கிருந்தாலும் சேவை செய்யும் வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புகளை பயன்படுத்தி, தேவனின் அன்பை உலகிற்கு காட்டுவோம்.

அன்பு, தாழ்மை, கருணை, அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் நாம் வாழும் போது, நம்முடைய வாழ்க்கை தேவனுக்கு மகிமையையும் மனிதருக்கு நன்மையையும் கொண்டு வரும்.

ஆகையால், நாம் அனைவரும் சேவையின் பாதையைத் தேர்ந்தெடுத்து, தேவனுக்கும் மனிதருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் வாழ்வை நடத்துவோம்.

**ஜெபசீலி ஆசீர்**




# கிறிஸ்துவுக்காய் எழும்புங்கள்

## தெபோராள்

தனக்கு தானே 'விழி' என்று சொல்லி தன்னையே தட்டி எழுப்பின ஒருத்தி தான் தெபோராள்.

**தெபோராள் யார்?**

இராஜாக்களும், தீர்க்கதரிசிகளும் இல்லாத காலத்தில் இஸ்ரவேலர் கர்த்தரின் பார்வையில் பொல்லாப்பானதை செய்து தேவனுக்கு கோபமூட்டினார்கள். இதனால் கர்த்தர் அவர்களை யாபீன் என்னும் கானானியருடைய ராஜாவின் கையில் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தார். அவன் சேனாதிபதிக்கு சிசெரா என்று பெயர். அவனுக்கு 900 இருப்பு ரதங்கள் இருந்தன. இருபது வருடம் இஸ்ரவேலரை யாபீன் கொடுமையாய் ஒடுக்கினான். அப்பொழுது இஸ்ரவேலர் தங்கள் தேவன நோக்கி விண்ணப்பம் பண்ணினார்கள். அவர்கள் விண்ணப்பங்களுக்கு பதில் தான் தெபோராள்.

தெபோராள் என்றால் "தேன் ஈ" என்று பொருள். அவள் ஒரு குடும்பத் தலைவி. அவள் கணவன் பெயர் லபிதோத். அவள் தீர்க்கதரிசன வரத்தால் தேவ ஜனங்களை வழிநடத்தி அவர்களை நியாயம் விசாரித்து வந்தாள். தன் மனைவி தேவ வேலைச் செய்யவும், தேவ ஜனத்தை முன்னின்று வழிநடத்தவும் அனுமதித்தது லபிதோத்தின் திட ஆள்தத்துவத்தையே குறிக்கிறது.

**தெபோராள் ஏன் எழும்ப வேண்டியதாயிற்று?**

***1. தெபோராள் வாழ்ந்த சூழ்நிலை அவளை எழும்பும்படியாய் தூண்டியது (நியா. 5:5).*** இஸ்ரவேலரின் தினசரி வாழ்வு மிகவும் பாதிக்கப்படிருந்தது. பெரும் பாதைகள் பாழாய்க் கிடந்தன. வழி நடக்கிறவர்கள் பக்க வழியாய் நடந்தார்கள். கிராமங்கள் பாழாய்ப்போயின. தேசத்தில் ராஜா இல்லை. குழப்பங்கள் மிகுதியாயிருந்தன. பொது வழிகள் பாதுகாப்பாயிராமல் திருடர்களால் நிறைந்திருந்தன. பொது வழிகள் பாதுகாப்பாயிராமல் திருடர்களால் நிறைந்திருந்தன. எனவே மக்கள் பக்க வழிகளை தெரிந்துக் கொண்டார்கள். அவர்கள் உள்ளத்தில் பயம் இருந்ததால் தங்களுக்கு அரணானச் சுவர்களைக் கட்டிக் கொண்டு கூட்டமாக வாழ்ந்தார்கள். தங்களை

விடுவிக்கும் தேவனை மறந்து விடுவிக்க மாட்டாத தேவர்களை தெரிந்துக் கொண்டார்கள்.

**2. தேவ ஜனங்களை எழுப்ப தெபோராள் எழும்ப வேண்டியதாயிற்று**

யுத்தம் வாசல் வரைக்கும் வந்தது. யுத்தத்தை முன்னின்று நடத்துவதற்கு யாரும் முன் வரவில்லை. அத்தருணத்தில் தெபோராள் இஸ்ரவேலிலே தாயாக எழும்பினாள். தெபோராள் எழும்பினதால் பாராக் தைரியமுடன் யுத்தத்தை முன்னின்று நடத்திச் சென்றான்.

**3. வானத்திலே ஒரு யுத்தம் உண்டாக தெபோராள் எழும்ப வேண்டியதாயிற்று (நியா. 5:20)**

நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம் பண்ணின. ஆவிக்குரிய யுத்தம். சில அர்ப்பணிக்கப்பட்ட ஆத்துமாக்கள் அன்று எழும்பினபடியால் நட்சத்திரங்களும் தேவ தூதர்களும், சிசெராவுக்கு எதிராக யுத்தம் பண்ணினார்கள்.

**4. தேவனை ஆராதிக்க தெபோராள் எழும்ப வேண்டியதாயிற்று**

கர்த்தர் இஸ்ரவேலுக்கு நீதியை சரிக்கட்டினார். ஜனங்கள் மனப்பூர்வமாய் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

நாம் துதிக்கும்போது தேவன் சிறையிருப்பை மாற்றுவார். தெபோராள் இப்போதைய சூழ்நிலைக்காக மட்டும் தேவனை துதிக்கவில்லை. பழைய காரியங்களுக்காகக் கூட தேவனை துதித்தாள். நாம் இருக்கும் சூழ்நிலை எதுவாக இருந்தாலும் துதிக்க வேண்டும். ஆண்டவருக்காக எழும்ப வேண்டும்.

**எப்படி எழும்ப வேண்டும்?**

1. தூசியை உதறிவிட்டு எழும்ப வேண்டும்.
2. அலங்கார வஸ்திரங்களை உடுத்திக் கொள்ள வேண்டும்.
3. கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்து விட்டு, அடிமைத்தன நுகம் ஒடித்து எழும்ப வேண்டும்.

பாரம் என்று தோன்றும் யாவையும் விட்டு எழும்புவோம். வல்லமையைத் தரித்துக் கொள்வோம். பரிசுத்த ஆவியானவரின் பெலனுடன் எழும்புவோம். தாயாக எழும்புவோம்! நமக்கு தேவன் கொடுத்துள்ள வரங்களைப் பயன்படுத்துவதில் எழும்புவோம்! தனிப்பட்ட ஜெபவாழ்வில் எழும்புவோம்! தெபோராளின் தேவன் நம்மையும் பயன்படுத்துவார்.


**ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,

The theme this May is "**SERVE GOD AND MAN**".

God wants His people to love Him and help others.

Little children can serve God and people too! They do not have to wait until they grow up.




God loves when children obey Him and show His love.


## SIMPLE WAYS CHILDREN CAN SERVE GOD AND MAN AT HOME AND AT SCHOOL





- ✓ Respect your Elders
- ✓ Obey Quickly and Help at Home - Listen to parents and help with small chores happily.
- ✓ Pray for Others - Pray for family, friends, teachers, and people in need Work hard and honest
- ✓ Be Kind and Share - Share toys, snacks, and kind words with others.
- ✓ Tell Others About Jesus - Invite friends to church or tell them Jesus loves them Strive for peace
- ✓ Use Your Gifts for God - Sing, smile, encourage or help in church. Everyone can do something

"Only one life, 'twill soon be past, only what's done for Christ will last." — C.T. Studd

## SAYING IT WITH PICTURES…




Let your conversation be always full of grace, seasoned with salt, so that you may know how to answer everyone.
– Colossians 4:6 NIV




Dear children, let us not love with words or speech but with actions and in truth.
– 1 John 3:18 NIV

## BOOKS OF THE BIBLE #5: DEUTERONOMY



**Author**: Moses

**When It Happened**: 1452 BC

**Chapters**: 34


**Key People**: Moses, Joshua

**Summary**: The people were ready to enter the Promised Land. This was a new generation.

Most had not personally experienced life in Egypt, the plagues, the miraculous escape, or the giving of the Law at Mount Sinai.




Deuteronomy begins with Moses standing in front of the new generation, and his job is to explain the significance of the laws of the Torah (Deut. 1:1-5).




Moses reminded the people of God's laws and again encouraged them to obey, love, serve, and fear God alone.

God's message was clear: He is the only Lord, and He would bless the people's obedience and curse their sin.


,

# TINY TOTS SECTION

## COLOR IN...

### Color by Number

Use they key to color in the spaces.




# Helping Others

Look for people who are helping others feel better in the hospital. How can you help someone feel better when they are sick or sad?



# Find It!

This group of friends helped collect school supplies for refugees who recently moved to their area. Find the hidden objects.






# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "SERVE GOD AND MAN"

1. Jesus said the greatest commandment is to love _____ (Matt. 22:37)

a. Money. b. God.
c. Sleep. d. Food

2. Jesus said the second great commandment is to love your _____ (Matt. 22:39)

a. Teacher b. Neighbor.
c. Ruler. d. Cousin.

3. Who said, "As for me and my house, we will serve the Lord"? (Joshua 24:15)

a. Joshua. b. Samuel.
c. Moses. d. David.

4. Jesus taught that the greatest among you must be your _____ (Matt. 23:11)

a. King. b. Servant.
c. Master. d. Soldier.

5. Whatever you do, work heartily, as for the Lord and not for _____. (Col. 3:23)

a. Angels. b. People.
c. Family. d. Money.

6. In the parable, who helped the injured man? (Luke 10:33-37)

a. Priest. b. Levite.
c. Samaritan. d. Merchant.

7. Jesus said, "I am among you as one who _____." (Luke 22:27)

a. Rules. b. Serves.
c. Teaches. d. Leads.

8. We should use our gifts as faithful _____ of God's grace. (1 Peter 4:10)

a. Judges. b. Stewards.
c. Rulers. d. Fighters.

9 According to James 1:27, Pure religion includes caring for widows and _____.

a. Strangers. b. Orphans.
c. Soldiers. d. Kings.

10. Jesus said whatever you did for the least of these, you did for _____(Matt.25:40)

a. Prophets. b. Me.
c. Disciples. d. Neighbors.

11. Do not grow weary in doing _____. (Galatians 6:9)


a. Business. b. Chores.
c. Good. d. Study.

12. Faith without works is _____ (James 2:17)


a. Bright. b. Dead. c. Rich. d. Easy.

# Sandy Service

This family is helping clean up the beach. Follow each path!
Who picked up the most trash? Who saw the most starfish?



# HELPING HANDS; SERVING HEART



David Livingstone showed how to serve God and people During his time in Africa, he visited villages where many people were suffering from sickness.

David cleaned wounds carefully and gave medicine to those who were ill. He shared the good news that Jesus brings hope, peace, and salvation.

Once a village was being troubled by lions that were attacking people and livestock. David joined the villagers to help protect them. A lion attacked David and grabbed his shoulder. Another man then shot the lion.



David survived, but his left arm was badly injured and never fully recovered. This incident shows David's courage and willingness to risk himself to help others.

## REFLECTION

a. Is courage the absence of fear, or acting despite fear?

______________________________________________________________

b. What are some "lions" that people face today? (E.g. sickness; loneliness)

______________________________________________________________

c. How can you serve others even when it costs you your time with friends, or your weekend? (E.g.: visit a sick neighbor; help someone)

______________________________________________________________

d. Search and write down 1 bible verse that talks about serving God and man; or helping others.

______________________________________________________________

______________________________________________________________


e. David's arm was injured for life, yet he kept serving. Who can help you in your quest to serving God and others (Hint: Jesus promised that the Helper would come)?


__________________________


# PARABLE DECODED #5: THE SHEEP and THE GOATS




SCAN ME






## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of May is: ______________________________.
2. _________________ wrote the book of Deuteronomy.
3. 1st John 3:18 says - _____________________________________________________

   _____________________________________________________
4. Matthew 25:40 says - _____________________________________________________

   _____________________________________________________
5. This month, the missionary we learnt about was ___________________________.

**Dear Children, let us ask the Holy Spirit to use our hands to serve, and our words to encourage. Let our lives bring joy to God, and blessings to people. God bless,**

**Mrs. Briliya Jeyaseelan**

# Answers to April Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – "EVANGELISM"

1. a. Make disciples; witness about Jesus.
2. c. That He will be with them always.
3. c. Wait for the Holy Spirit.
4. d. All Christians.
5. a. Antioch.
6. d. None of the above.
7. d. Gentiles.
8. a. Timothy.
9. a. Name of Father; Son; and Holy Spirit.
10. a. Everything Jesus commanded.
11. d. All of the above.
12. b. Churches.

## Complete the Short Review Below…

6. The theme for the month of April is: **Evangelism**.
7. Mark 16:15 says - **And He said to them, 'Go into all the world and preach the gospel to every creature.**
8. When it came time to finally enter the land God had promised, only **Joshua** and **Caleb** believed the Lord was with them.
9. The Holy Week leads up to the celebration of **Jesus' triumph over death** on **Easter Sunday**.
10. **Robert Moffat** served the Lord ministering to tribes in **South Africa** for over **50** years.
11. The three parables of the lost (Sheep, Coin, and Prodigal Son) in Luke 15 collectively teach that God **actively seeks the lost**, **rejoices over repentance, and offers unconditional love and forgiveness**



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. தாவீது தெரிந்தெடுத்த கூழாங்கற்கள் எத்தனை?
2. கிபியோனியருக்காக யோசுவாவை எதிர்த்துப் போரிட்ட எமோரிய ராஜாக்கள் எத்தனை பேர்?
3. சமாரிய ஸ்திரீக்கு எத்தனை புருஷர்கள் இருந்ததாக இயேசு கூறினார்?
4. புத்தியுள்ள கன்னிகைகள் எத்தனை பேர்?
5. யோசேப்பு தன் சகோதரர்களுக்கு விருந்து படைத்தபோது, பென்யமீனுடைய பங்கு எத்தனை மடங்கு அதிகமாயிருந்தது?
6. பவுல் சபையிலே புத்தியோடு எத்தனை வார்த்தைகளைப் பேச விரும்பினார்?
7. பெதஸ்தா குளத்திற்கு மண்டபங்கள் எத்தனை?
8. எஜமானிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிக தாலந்துகள் எத்தனை?
9. இஸ்ரவேல் புத்திரர் புறப்படும்போது எத்தனை அணியாக புறப்பட்டுப் போனார்கள்?
10. யோசேப்பு எத்தனை சகோதரரைத் தெரிந்தெடுத்து பார்வோனுக்கு முன்பாக நிறுத்தினான்?
11. செலோப்பியாத்தின் குமாரத்திகள் எத்தனை பேர்?
12. ஆசாரிய ஊழியத்திற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட ஆரோனின் குமாரர்கள் எத்தனை பேர்?
13. பவுல் யூதர்களால் எத்தனை முறை "ஒன்று குறைய நாற்பது" அடிகளைப் பெற்றார்?
14. நியாயாதிபதிகள் புத்தகத்தில், தாலந்துள்ள மனுஷரைத் தேடி உளவு பார்க்கஅனுப்பப்பட்ட மனுஷர்கள் எத்தனை பேர்?
15. இஸ்ரவேலர்களை எதிர்த்துப் போரிட்ட 'பெலிஸ்தியரின் அதிபதிகள் எத்தனை பேர்?

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும். தயவுசெய்து WhatsApp மூலம் பதில்களை அனுப்புவதை தவிர்க்கவும்.*

## ஏப்ரல் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | இருப்பிடம் |
|---|---|---|
| 1 | பரமபிதா நடாத நாற்றெல்லாம் | மத்தேயு 15:13 |
| 2 | தானியேல் | தானியேல் 5:17 |
| 3 | மோவாபியர் | ஏசாயா 16:7 |
| 4 | எஸ்றா என்னும் ஆசாரியனும், ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை விளக்கிக்காட்டின லேவியரும் | நெகேமியா 8:9 |
| 5 | கர்த்தர் | 1 நாளா. 21:15 |
| 6 | ஆபேலிலே | 2 சாமு.20:18 |
| 7 | சீயோன் குமாரத்தியின் காயம் | புலம்பல் 2 :13 |
| 8 | தீர்க்கதரிசி | ஓசியா 9:8 |
| 9 | பெத்ஏசேலின் | மீகா 1:11 |
| 10 | கர்த்தர் | உபாகமம் 18:17 |
| 11 | எப்பிராயீம் புத்திரர் | சங்கீதம் 78:9 |
| 12 | லாபான் | ஆதி. 31:47 |
| 13 | அபியத்தாரின் குமாரன் யோனத்தான் | 1ராஜா. 1:42 |
| 14 | அபியா | 2நாளா. 13:21 |
| 15 | யோசுவா | யோசுவா 9:22,23 |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## ஏப்ரல் மாத வேத வினாக்களுக்கான பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs. Adela Ezra
3. Mrs.Desigta Jaison
4. Mr.Emmanuel (Ruwais)
5. Mrs.Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Helen Sharmila Ray
8. Mrs.Hema RajaGuru
9. Mr.Jeba Jino
10. Mrs.Jasmine Sobha
11. Mrs.Jebaseeli Asir
12. Mrs.Dr. Jenila Gannraj.L
13. Mrs.Jacqulin Rani
14. Mr.Joslin Ananth .N
15. Mr.John .H [Ruwais]
16. Mrs.Kishi Maher
17. Mrs. Malar Ernast
18. Mr.Merlin Jeba Kinis
19. Mrs.Nandhini Rajkumar
20. Mrs.Padma Brin
21. Mrs.Praveena Arun (Ruwais)
22. Mr.Prawin Durai Sam (Ruwais)
22. Mrs.Priya Ranjith Kumar
23. Mrs.Persis John
24. Mrs.Peppin Jenson
25. Mr.Raja Guru Sekar
26. Mrs.Sarah Manuel
27. Mr.Salin Robert
28. Mrs.Sheeba Merlin
29. Mrs.Sheeba Herlin
30. Mrs.Sheneegah Stanly
31. Mrs.Sharmila Rajesh
32. Mrs.Selvi George
33. Mr. Selva Shaji
34. Mrs. Subija Jino
35. Mrs.Sweetilin Frank
36. Mrs. shobana Milton
37. Mrs. Suni Smila Edwin
38. Mrs.Valentine Sharmila Paul
39. Mrs. Vithya Dinesh
40. Mr. Ramesh Rajan
41. Mr. Ramesh Rajan

## Children who answered April – 2026 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Alton kim Kinis
4. Albern
5. Aleina
6. Andrea kim Kinis
7. Anana Natalie
8. Benson Immanuel Raj
9. Brightson Timothy Raj
10. Clement Dave
11. Daniel Vanya (RUWAIS)
12. Danion Lemuel
13. Defina
14. Diyas Dinesh
15. Effrin
16. Efrona
17. Eion Jayden
18. Eric Jayden
19. Evangelia Sharon
20. Evaniya Sherin
21. Evelyn Loria V
22. Elize Glora Alfred
23. Gabrilyn Hannah
24. Giana Elin
25. Hadriel Adventier
26. Jadon Darius Ruwais]
27. Jabree Aaron
28. Janey Titus
29. Jarick Aaron
30. Jaslin Shanna
31. Jaylan Paul Jino
32. Jeffrey Samuel
33. Jen Scudd
34. Jenessa Johnson
35. Jerilyn Pushpam Nelson
36. Jessica Eban
37. Jevlyn Ana
38. Jeya Jehosheba Maher
39. Jim Scott
40. Joanna Paul Jino
41. Joel Abrakam
42. Joha Anit Manuel
43. Johan Sam Manuel
44. Johanan Paul Jino
45. Keren Tessa
46. Kathryn Joan
47. Kavi yalini
48. Kavin Immanel
49. Kev Shannen P.S(Ruwais)
50. Leona Juliet
51. Leonel I.J. Stalin
52. Liana Erin
53. Linuel I.J. Sherwyn
54. Mark Jayden
55. Mishael Wesley
56. Nashley Vinod Kiran
57. Pristina samlynPrince
58. Rivqah Deby Rajkumar
59. Sam Jesvin Vincent
60. Selvajesvin (Ruwais)
61. Sherlyn Sana (Ruwais)
62. Starlyne Noble
63. Steffi Priscilla .R
64. Yedidiah Arun (Ruwais)
65. Yovaan jairus (Ruwais)
66. Hadassah Gracelin Arunkumar -Ruwais

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

**Kindly avoid sending answers via WhatsApp.**



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**நெருப்பு தகடுகளிலிருந்து தப்புவித்த நீதியின் தேவன்**

தோமா மறுபடியும் அரசனை நோக்கி, "கர்த்தரும், என் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை உம்முடைய ஞானத்திற்கும் மேம்பட்டது. நீர் அவருக்கு விரோதமாக எழும்பியபடியால் தேவனுடைய கோபத்திற்கு நிச்சயமாய் ஆளானீர்" என்றார்.

தோமா இப்படியாக சொன்னபோது, பல மடங்கு சூடாக்கப்பட்ட எரி பந்தத்தைப்போல தகனித்துக் கொண்டு இருந்த இரும்புத் தகடுகளை சேவகர்கள் எடுத்து வந்தார்கள். அதில் தோமாவை நிறுத்தி தண்டனை கொடுத்தபின், உயிரோடு அவரை எரித்துக் கொலை செய்யவும் அரசன் திட்டமிட்டு இருந்தான்.

அரசனின் கட்டளையின்படி, தோமாவை அந்த இரும்புத் தகடுகளின் மேல் ஏறி நிற்பதற்காக அதனருகே வந்த சமயத்தில், பூமிக்கு அடியிலிருந்த திடீரென்று ஒரு நீரூற்றுத் தோன்றி, அந்தத் தகடுகளை நனைத்து முழுவதுமாக குளிரச் செய்து விட்டது! இப்படியாக, கர்த்தராகிய தேவன் சிறிதளவு கூட தோமாவிற்குப் பாதிப்பு ஏற்படாதபடிக்கு அற்புதமாகப் பாதுகாத்தார்.

**தேசத்தின் மேல் தேவ கோபாக்கினை!**

தோமா துன்புறுத்தப்பட்டதின் நிமித்தமாக தேவ கோபாக்கினை இறங்கியதால், அந்த நீரூற்றிலிருந்து மடை திறந்த வெள்ளம் போல தண்ணீர் புறப்பட்டு வந்து, அரண்மனை மற்றும் அந்த அரசனின் ஆளுகைக்கு உட்பட்ட தேசம் முழுவதையும் சூழ்ந்து கொண்டது. இராஜா உட்பட, ஜனங்கள் அனைவரும் அரண்மனையின் உயரமான மற்றும் பாதுகாப்பான இடங்களைத் தேடி

ஓடினர். ஆனால், தோமா இருந்த இடத்தை மட்டும் வெள்ளம் நெருங்கவில்லை.

அதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, பயந்து நடுங்கிய அரசன் தோமாவை நோக்கி: “இந்த வெள்ளத்தினால் நான் இறந்து விடாதபடிக்கு உம்முடைய கடவுளிடம் எனக்காக வேண்டிக்கொள்ளும்” என்று கெஞ்சினான்.

தோமாவின் இருதயம் பாரம் கொண்டபடியினால் கர்த்தரை நோக்கி, “இயற்கையின் மேல் அதிகாரமுள்ள ஆண்டவரே, நீர் மனமிரங்கி, இந்த வெள்ள அபாயத்திலிருந்து இவர்கள் அனைவரையும் காப்பீராக! தேவையுள்ள நிலப் பரப்பிற்கு நேராக இந்த தண்ணீர் எல்லாம் செல்வதாக! இந்த தேசத்தில் உள்ள உம் மீது விசுவாசமுள்ள ஜனங்களின் நிமித்தமாக இந்த அழிவைத் தடுப்பீராக!” என்று, ஆபிரகாமைப் போல மன்றாடி ஜெபித்தார். உடனே வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக வற்ற ஆரம்பித்தது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகத்துவத்தையும், இரக்கத்தையும் அற்புதச் செயலையும் கண்ட அரசனும், அந்த தேசத்தின் ஜனங்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தனர். அவர்களைத் தோமா தொடர்ந்து வேத சத்தியத்திற்குள் வழி நடத்தினார்.

இளவரசன், தோமாவின் நெருங்கிய நண்பனாக மாறியதோடு, தினமும் அவர் மூலமாக இயேசு கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியைக் கேட்டு அறிந்து கொண்டான். கடைசியில், அரசனின் முழுக் குடும்பமும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது!

தோமாவும் பவுலைப்போல, புற ஜாதிகளுக்கும், அரசர்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் இயேசு கிறிஸ்துவை அறிவிக்கிறதற்காக, கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட வல்லமையான பாத்திரமாக இருந்தார். (அப்.9:15)

**பவுலுக்கு இணையாக தோமாவின் ஊழியங்கள்**

அப்போஸ்தலர்கள் பல்வேறு தேசங்களில் சுவிசேஷ விதைகளை விதைத்து இருந்தாலும், அவர்களில் அதிகமான தேசங்களில் ஊழியங்களை நிறைவேற்றியவர்கள் இருவரே.

ஒருவர் அப்போஸ்தலராகிய தோமா! மற்றொருவர் அப்போஸ்தலராகிய பவுல்! மேற்கத்திய நாடுகளாக ஸ்பெயின், ரோம் போன்ற தேசங்களில் பவுலும், கிழக்கத்திய நாடுகளான ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான், இந்தியா போன்ற தேசங்களில் தோமாவும் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றி, எண்ணற்ற ஜனங்களை இயேசு கிறிஸ்துவிடம் வழி நடத்தி, அனேக திருச்சபைகளையும் ஸ்தாபித்தனர்.

**ஆப்கானிஸ்தானில் ............**

சுமார் கி.பி.46ம் ஆண்டு, தோமா இந்தியாவிலிருந்து எருசலேமுக்கு பயணமானார். அவர் எருசலேமுக்கு செல்லும் வழியில் ஆப்கானிஸ்தானிலுள்ள, கத்தகார் என்கிற பட்டணத்தில் பிரவேசித்து, அங்குள்ள ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார். அதன் நிமித்தமாக, அனேகர் இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தனர்.

**- தொடரும்**

## பாடல் பிறந்த கதை

**அருள் நிறைந்தவர், பூரண இரட்சகர் [பாமாலை 366]**

*((My faith looks up to Thee)*

1. அருள் நிறைந்தவர்
பூரண ரட்சகர்
தேவரீரே
ஜெபத்தைக் கேட்கவும்
பாவத்தை நீக்கவும்
பரத்தில் சேர்க்கவும்
வல்லவரே.

2. சோரும் என் நெஞ்சுக்கு
பேரருள் பொழிந்து
பெலன் கொடும்.
ஆ! எனக்காகவே
மரித்தீர், இயேசுவே;
என் அன்பின் ஸ்வாலையே
ஓங்கச் செய்யும்.

***'என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருந்தேன்' கலாத் 2 : 20***

நமது ஆராதனைகளில் பாடப்படும் பாடல்கள், கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்த வெவ்வேறு பொருள்களின் பேரில் எழுதப்பட்டவை. 'அருள் நிறைந்தவர்' என்னும் இப்பாடல், 'பிரார்த்தனை' என்னும் பொருளில் எழுதப்பட்டது. முதல் மூன்று கவிகளில் ஆண்டவரின் சகாயத்தை வாழ்நாள் முழுவதும் அளிக்க ஜெபித்து, கடைசிக்கவியில், மரிக்கும் காலத்தில் ஆறுதல் தந்து, மோட்சத்தில் சேர்க்கும்படி மன்றாடிப் பாடும் பாடலாகும் இது.

இதை எழுதிய ரே பாமர் (Ray Palmer) போதகர் அமெரிக்காவில் ரோட் ஐலண்டு மாகாணத்தில், காம்ப்ட்டன் நகரில், 1808ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் தேதி பிறந்தார். இவரது தந்தை ஒரு நீதிபதி. தமது இளவயதில் பாஸ்டன் நகரில் வளர்ந்து, பின் அங்குள்ள ஒரு மளிகைக் கடையில் கணக்கராக வேலைபார்த்தார். பின்பு யேல் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் கற்றுத் தேறிப் பட்டம்பெற்று, நியூயார்க் நகரில் ஒரு பெண் பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்தார்.

வேலை பார்க்கும்போதே சுயமாக வேதசாஸ்திரம் கற்று, 1830ல் குருப்பட்டம் பெற்றார். பின்பு முப்பது ஆண்டுகள் இரு சபைகளில் போதகராக ஊழியம் செய்தார்.

ரே பாமர் குருப்பட்டம் பெற்றுப் போதகரானபின், அவருக்கு கிறிஸ்தவப் பாடல்கள் எழுத ஆவல் உண்டாயிற்று. ஒருநாள் மாலையில் தமது அறையில் உட்கார்ந்து, ஏதாவது பாடல் எழுத ஆவல்கொண்டு, தமது முதல் பாடலாக, 'அருள் நிறைந்தவர்' என்னும் பாடலை ஆறு கவிகளுடன் எழுதி, தன் சட்டைப்பையில் வைத்துவிட்டு, இரண்டு ஆண்டுகளாக அதை மறந்துவிட்டார். 1832ல் பாஸ்டன் நகரில் அவரது நண்பரான லவல் மேசன் பண்டிதரைச் சந்தித்தார். அப்போது மேசன் பண்டிதர், 'சமுதாய வழிபாடுகளில் பாடுவதற்கேற்ற ஆவிக்குரிய பாடல்கள்' என்னும் ஒரு பாட்டுப் புத்தகத்தைத் தொகுப்பதில்ஈடுபட்டிருந்தார். இப்புத்தகத்தில் சேர்த்துக்கொள்ளத்தக்க பாடல்கள் தம்மிடம் உண்டா என மேசன் பண்டிதர் பாமர் போதகரைக் கேட்க, அவர் இரு ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டு, தமது சட்டைப் பையிலிருந்த, 'அருள் நிறைந்தவர்' என்னும் பாடலைக் கொடுத்தார். பண்டிதர் இதை ஒரு சிறந்த பாடலாகக் கருதி, தாமே அதற்கு, 'Olivet' என்ற ஒரு இராகத்தையும் எழுதினார். மேலும் அவர் போதகரை நோக்கி, 'நீங்கள் அநேக ஆண்டுகள் உயிருடன் இருந்து மக்களுக்கு அநேக நற்காரியங்களைச் செய்யக்கூடும். ஆனால் பின் சந்ததியார் இந்த ஒரே பாடலின் மூலமாகத்தான் உங்களை அறிந்து கொள்வார்கள்' என்று போற்றியுள்ளார்.

இப்பாடல்தான் பாமர் போதகர் தமது வாழ்க்கையில் எழுதிய முதல் பாடல். இதன் இறுதி அடிகளை எழுதும்போது, அதிக உணர்ச்சியால் பரவசமடைந்து, கண்களில் நீர் ததும்பியதாக அவரே கூறியுள்ளார். நமதாண்டவர் அருள் நிறைந்தவராகவும், பூரண இரட்சகராகவும் இருப்பதைத் தமது உள்ளத்தில் உணர்ந்து, எவ்வகைக் கலக்கம் நேரிடினும் அவரே தகுந்த சகாயமும், ஆறுதல் செய்ய வல்லவர் என்பதை இப்பாடலின் மூலம் உணர்த்துகிறார். இப்பாடல் முதல்முறையாக இங்கிலாந்தில் பிரசுரமானபோது, 'பரிசுத்தவான்கள் உலக வாழ்க்கையை நீத்து, விண்ணுலகம் செல்லும்போது பாட, அல்லது பாடக்கேட்க விரும்பும் பாட்டு' என்று போற்றப்பட்டது. பாமர் போதகர் இப்பாடலுக்கு ஆறு கவிகள் எழுதினார். ஆனால் நமது புத்தகங்களில் நான்கு கவிகள்தான் உள்ளன.

தமது வாழ்க்கையில் அநேக பாடல்கள் எழுதியதுடன், லத்தீன் மொழியிலிருந்தும் பல பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஆனால் இவற்றிற்கு ஊதியம் பெற மறுத்துவிட்டார்; அவர் எழுதிய இதர பாடல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை.

ரே பாமர் போதகர் 1887ம் ஆண்டு, மார்ச் மாதம் 29ம் தேதி, தமது 79ம் வயதில் காலமானார்.




## ஆராதனை மற்றும் நிகழ்வுகள்

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church |
| | | 8.45 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 3 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 5 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 8 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church |
| | | 8.45 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 10 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 12 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 15 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St. Andrew's church |
| 17 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 19 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 22 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church |
| | | 8.45 pm – 11.00 pm | தூய ஆராதனை -St. Andrew's church |
| 26 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 29 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St. Andrew's church |
| 31 | ஞாயிறு | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள்

| | |
|---|---|
| **01-05-26** | |
| பாமாலை – 15 | அலங்கார வாசலாலே |
| பாமாலை – 298 | ஆராய்ந்து பாரும் கர்த்தரே |
| கீர்த்தனை – 283 & 333 | தோத்திர பாத்திரனே, தேவா<br>எங்கும் புகழ் இயேசு ராஜனுக்கே |
| பாமாலை – 33 | இந்நாள் வரைக்கும், கர்த்தரே |
| **08-05-26** | |
| பாமாலை – 375 | நீரோடைய மான் வாஞ்சித்து |
| பாமாலை – 295 | அருள் மாரி எங்குமாக |
| கீர்த்தனை – 1 & 193 | சத்தாய் நிஷ்களமாய்<br>எல்லாம் இயேசுவே |
| கீர்த்தனை – 8 | தெய்வன்பின் வெள்ளமே |
| **15-05-26** | |
| பாமாலை – 256 | விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா |
| பாமாலை – 384 | யுத்தம் செய்வோம், வாரும் |
| கீர்த்தனை – 383 | மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு<br>ஸ்தோத்திரம் இயேசு நாதா |
| கீர்த்தனை – 320 | |
| **22-05-26** | |
| பாமாலை – 11 | மகா அதிசயங்களை |
| பாமாலை – 139 | தெய்வாவி மனவாசராய் |
| கீர்த்தனை – 226 & 101 | ஆத்தும ஆதாயம் செய்குவோமே<br>வரவேணும் பரனாவியே |
| பாமாலை – 44 | உன்னதமான கர்த்தரே |
| **29-05-26** | |
| பாமாலை – 143 | வானமும் பூமியும் |
| பாமாலை – 347 | தெய்வ ஆட்டுக்குட்டியே |
| கீர்த்தனை – 187 & 70 | தந்தேன் என்னை இயேசுவே<br>ஆத்துமமே, என் முழு உள்ளமே |
| பாமாலை – 40 | மெய்ஜோதியாம் நல் மீட்பரே |

# திருமறை பாட ஒழுங்குகள்

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **01-05-26** | உழைப்பே ஆசீர்வாதம் | உபாகமம் 28:1-14 | 2 தெச. 3:6-8 | யோவான் 5:1-16 | - |
| **08-05-26** | தொழில் நுட்ப காலத்தில் கிறிஸ்தவம் | 1சாமு. 17:38-51 | 1 கொரி. 9:19-26 | மத்தேயு 8:23-34 | 96 |
| **15-05-26** | மகத்துவமான மணவாழ்வு | ஆதி. 2:18-26 | எபேசியர் 5:20-33 | மாற்கு 10:1-9 | - |
| **22-05-26** | பரிசுத்த ஆவியானவர் | 1 இராஜா. 19:11-18 | அப். 2:1-13 | யோவான் 20:19-23 | 29 |
| **29-05-26** | திரித்துவம்: தெய்வீக அன்பின் ஒன்றிணைப்பு | ஏசாயா 48:12-17 | எபேசியர் 1:3-14 | யோவான் 3:8-16 | 33 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **05-05-26** | நீதிமொழிகள் | 28:14-28 | Hamdan |
| **12-05-26** | நீதிமொழிகள் | 29:1-14 | Muroor |
| **19-05-26** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| **26-05-26** | நீதிமொழிகள் | 29:15-27 | Mussafah |

# HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Master. | Antrin Jefry |
| 1 | Baby | Jeremiah Prince |
| 2 | Mr. | Stalin Raghu |
| 2 | Mr. | Lionel Stanley |
| 3 | Mrs. | Sheeba Merlin Robert |
| 4 | Mr. | Gunalan A |
| 4 | Mr. | Titus Agastin |
| 4 | Mr. | Joel |
| 4 | Baby | Adonia Paul A |
| 5 | Master. | Aiden Steve |
| 5 | Ms. | Jiana Annie Dorothy |
| 6 | Mr. | Michael Sam |
| 6 | Baby | Irayuraudaiyoon Srinivasan |
| 6 | Mr. | Behin Jeyakumar A |
| 6 | Master. | Effrin |
| 6 | Mr. | Thirumalai Kumar |
| 8 | Mr. | Vincent Churchill. N |
| 8 | Master. | Aadhav Steve Mattew |
| 8 | Mrs. | Raxlin Raneesha |
| 8 | Mr. | Justin Pious Raj |
| 9 | Mr. | Jayakaran Paul |
| 9 | Mr. | Emmanuel Vanya. J.P |
| 10 | Ms. | Emifa Shalom |
| 10 | Mr. | Max Jeevin |
| 10 | Mrs. | Ruby Ashok |
| 10 | Mr. | Kins. R |
| 10 | Mr. | Frank Santhosh Kumar |
| 10 | Mr. | Babu Radhakrishnan |
| 12 | Mr. | Aaron Dennison |
| 12 | Mrs. | Gladys Vimala Hepzibah G |
| 13 | Mr. | Anderson Samuel |
| 13 | Baby | Heidi Franklin |
| 13 | Ms | Cantrella Chris Marx |
| 14 | Mrs. | Latha |

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 14 | Ms. | Vinu Jenisha |
| 15 | Mrs. | Subija Jino. J |
| 15 | Miss. | Elize Glora Alfred |
| 15 | Mrs. | Steefi Gabriella |
| 15 | Mrs. | Sheeba Wilfred |
| 16 | Mr. | Chris Lilian Vasantha Prince |
| 17 | Mr. | Ragland Asir |
| 17 | Mr. | Shibin I |
| 17 | Mr. | Shibu Kumar |
| 18 | Mr. | Solomon Satheesh |
| 19 | Mrs. | Joy Sharmila |
| 19 | Mr. | Carmel Beeshow |
| 20 | Mr | S. Ebi Tenniyson |
| 20 | Mrs. | Melba D |
| 20 | Mr. | Sunil Jaymurthy |
| 21 | Mr. | Dinesh Y |
| 22 | Mr. | Sujil |
| 23 | Master. | Joshua Selva Shaji |
| 23 | Mr. | Santhosamani |
| 23 | Master | Joshuva |
| 25 | Mrs. | Geetha Kannan |
| 25 | Ms. | Phoebe Rebekah Solomon |
| 25 | Baby. | Jayden Nathaniel |
| 25 | Mrs. | Anish Brisilla S R |
| 25 | Mr. | Denson Thangaiyan |
| 26 | Mrs. | Brijita Pramila |
| 26 | Mr. | Giftson |
| 26 | Mr. | Godson |
| 26 | Mr. | Kavin S |
| 27 | Ms. | Shereny Daniel |
| 27 | Mr. | Richard Immanuel |
| 27 | Mr. | Ebinezer Prince S |
| 29 | Ms. | Abinaya Jasmine |
| 29 | Mrs. | Akhila Mathew |
| 30 | Mrs. | Subha Shibu |
| 31 | Master | Judah Prince |

# HAPPY ANNIVERSARY!



| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 1 | Rev.Dr.& Mrs. | Samuel A |
| 1 | Mr. & Mrs. | Manohar Rajapandi |
| 1 | Mr. & Mrs. | Julious Agastian |
| 5 | Mr. & Mrs. | J. Manuel Raj John |
| 6 | Mr. & Mrs. | Manuel Yesudian |
| 6 | Mr. & Mrs. | Vincent Churchill. N |
| 7 | Mr. & Mrs. | Johnson Sagayaraj |
| 7 | Mr. & Mrs. | Srinivasan Jayaprakasam |
| 9 | Mr. & Mrs. | Rajkumar |
| 9 | Mr. & Mrs. | Johnson Ramesh Kumar |
| 9 | Mr. & Mrs. | Brin K S |
| 11 | Mr. & Mrs. | Augustin Thanesh Issac |
| 12 | Mr. & Mrs. | Allwin Emmanuel Packianathan |
| 12 | Mr. & Mrs. | Richard Immanuel |
| 13 | Mr. & Mrs. | Salin Robert Samuel |
| 13 | Mr. & Mrs. | Michael G |
| 17 | Mr. & Mrs. | Jino. J.D |
| 17 | Mr. & Mrs. | Kishor Raj |
| 19 | Mr. & Mrs. | Vasanth Dhanapaul |
| 21 | Mr. & Mrs. | Dinesh Y |
| 23 | Mr. & Mrs. | Ajin Kumar K C |
| 25 | Mr. & Mrs. | Vigin Cv |
| 27 | Mr. & Mrs. | Joe Vivek David |
| 29 | Mr. & Mrs. | Radja Thomas |
| 29 | Mr. & Mrs. | Japa Kumar. C. S |
| 29 | Mr. & Mrs. | Merlin Bright |
| 31 | Mr. & Mrs. | Arulanandham Pous M |

## NEW ARRIVAL



| இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் சங். 127.4a | | |
|---|---|---|
| S.No. | Baby Name | Parent's Name |
| 1 | Pearson Sam | Mr. Prince Trison &<br>Mrs. Jenis |
| 2 | Amalyn Elinah Pearl | Mr. Arul Sugirson Samuel &<br>Mrs. Elphida Vinolin |


## பெண்கள் சிறப்பு ஆராதனை















## மொய் விருந்து








மனித
சேவையே
தேவ சேவை
அன்பில் தொடங்கி, சேவையில் நிறைவடையும் வாழ்க்கை
“நீங்கள்
இவ்வளவு
சிறியவர்களில்
ஒருவருக்குச் செய்ததை
எனக்கே செய்தீர்கள்”
– மத்தேயு 25:40
அன்பு காட்டு
சேவை செய்
தேவனை மகிமைப்படுத்து
A LIFE OF LOVE, SERVICE & FAITH